**தேதி :** 21.04.2026 **SC.No. :** 306/2024 PW :1 மாரி

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரியின் மனைவி எனது பெரியம்மா மகள். எதிரியின் தாத்தா சூசைமணிநாடார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய கணவரின் தாத்தாவும், எதிரியின் தாத்தாவும் சகோதரர்கள் என்றால் எனக்கு தெரியாது. முதல்விசாரணையில் கூறியுள்ள சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியும். சம்பவத்திற்கு 2 மாதங்களுக்கு முன்பு எதிரி என்னிடம் அசிங்கமாக பேசியதற்காக ஊரில் உள்ள பெரியவர்கள் எதிரியை சத்தம் போட்டார்கள் என்றால் போலீசில் கம்ப்ளைண்ட் கொடுத்தோம். ஊர் பெரியவர்களை வைத்து எதிரியை பேசவில்லை என்றால் சரிதான்.

இந்த சம்பவத்திற்கு முன்பு எதிரி என்னை கெட்ட வார்த்தை பேசியதற்கு நான் புகார் கொடுக்கவில்லை. என்னுடைய ஊரிலிருந்து ஆலங்குளம் காவல்நிலையம் 6 கிமீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆலங்குளம் பஸ்ஸ்டாண்டை ஒட்டி அரசு மருத்துவமனை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் சம்பவ நாள் உடனடியாக காவல்நிலையத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடு இரவில் நடந்தது. மறுநாள் புகார் கொடுத்தேன். சம்பவம் நடந்தவுடன் வந்த எஸ்.ஐயிடம் வாய்மொழியாக சொன்னேன். எஸ்.ஐ எழுதி குறித்து கொண்டாரா? என்றால் குறித்து கொண்டார். மறுநாள் காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்.

ஆலங்குளத்திலுள்ள ஆறுமுகக்கனி என்பவரின் மட்டன்கடைக்கு என்னுடைய கணவருடன் சென்றேனா? என்றால் சென்றேன். ஆறுமுகக்கனியின் மட்டன்கடை கிழக்கே பார்த்து உள்ளதா? என்றால் எனக்கு தெரியாது. எதிரி எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி வந்து எங்களை வழிமறித்தார் என்று நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், எனது கணவரும் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி சென்றோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய கணவரின் கழுத்தின் எந்த பக்கம் எதிரி வெட்டினார் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பைக்கிலிருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டதா? என்றால் கீழே விழவில்லை. சம்பவத்திற்கு பிறகு என்னுடைய கணவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். பதற்றம் இல்லாமல் எனது கணவர் இருந்தார் என்றால் எனக்கு புரியவில்லை. அந்த இடத்திலுள்ள கடைகள் செயல்பட்டு கொண்டிருந்தது என்றால் சரிதான். மக்கள் யாரும் ஓடவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எனது கணவருடன் ஆலங்குளம் பஜாருக்கு வரவில்லை என்றாலும், ஆஜர் எதிரியால் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஏற்கனவே போலீசார் தயார் செய்த ஆவணங்களில் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு அதற்கேற்ப பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.22 15:58:51 +0530

**தேதி :** 21.04.2026 **SC.No. :** 306/2024 PW :2 பாஸ்கர்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னுடைய தாத்தாவும், எதிரியின் தாத்தாவும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய ஊர் ஆலங்குளம் காவல்நிலையத்திற்கு கிழக்காக உள்ளது என்றால் சரிதான். ஆலங்குளம் பஜார்க்கு நாங்கள் வரவேண்டும் என்றால் காவல்நிலையம் தாண்டி வரவேண்டும் என்றால் சரிதான். சம்பவநாள் நாங்கள் பஜார்க்கு மட்டன் வாங்க வந்தோம் என்றால் மார்க்கெட்டிற்கு சென்றோம். பஜார்க்கு வரவில்லை. ஆலங்குளம் காவல்நிலையத்திற்கு மேற்கே நாங்கள் வரவில்லை என்றால் சரிதான். எதிரி வழிமறித்தபோது நான் நிலை தடுமாறி கீழே விழுந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய தினத்தன்று ஆறுமுகக்கனி கடைக்கு செல்லவில்லை என்றால் போவதற்கு முன் எதிரி வழிமறித்தார்.

எதிரி எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி வந்து வழிமறித்தார் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அரிவாள் சுமார் 6 அடி இருக்குமா? என்றால் எனக்கு தெரியாது. சம்பவயிடத்திலிருந்து ஆலங்குளம் காவல்நிலையத்திற்கு 2 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரியல்ல. சுமார் 10 நிமிடங்கள் ஆகும். நடந்த

சம்பவத்திற்கு உடனடியாக ஆலங்குளம் காவல்நிலையத்தில் எழுத்து பூர்வமாக புகார் கொடுக்கவில்லை என்றால் மறுநாள் புகார் கொடுத்தேன். சம்பவயிடம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றாலும், அங்கு கடைகள் திறந்து இயல்பாக இயங்கி கொண்டிருந்தன என்றாலும் சரிதான். எனக்கு எழுதப் படிக்க தெரியும். நான் எனது கைப்படத் தான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் எழுதிகொடுத்தேன். புகார் கொடுத்ததற்கு பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் எதிரியால் எனக்கு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஏற்கனவே எங்கள் வீட்டினருக்கும், எதிரியின் வீட்டினருக்கும் நீண்ட நாட்களாக இருந்த சொத்து பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.22 15:59:02 +0530

**தேதி :** 21.04.2026 **SC.No. :** 306/2024 PW :3 சகாயராணி

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பாஸ்கர் என்னுடைய உடன் பிறந்த சகோதரர். சம்பவத்தை குறித்து நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நடந்த சம்பவம் குறித்து எனது கணவரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆலங்குளம் காவல்நிலையத்தினர் சொல்லி நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. மருத்துவ சிகிச்சை நான் உடனடியாக எடுக்கவில்லை என்றால் சரிதான், மறுநாள் எடுத்தேன். எதிரியின் வீட்டிற்கும், அ.சா.2 பாஸ்கர் வீட்டினருக்கும் ஏற்கனவே சொத்து பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய வீட்டிலும், பாஸ்கர் வீட்டிலும் இருசக்கரவாகனங்கள் உள்ளன என்றால் சரிதான். இருசக்கரவாகனத்தில் ஆலங்குளம் காவல்நிலையத்திற்கும், ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கும் 15 நிமிடங்களில் வந்து விடலாம் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.22 15:59:10 +0530